மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ஔவையார் அதியமான் நட்பு நிலையும் இன்றைய நட்பு நிலையும் ஓர் ஆய்வு

# Compare And Analyze Avvaiyaar Athiyaman's Friendship Status With Today's Friendship Status

கீர்த்தனா கம்பதாசன்/ Khirthana Kambathasan[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: kidskhirtana@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வில் ஔவையாரும் அதியமானும் நட்பு நிலையை அறிந்து அவை இன்றைய காலத்திற்கு ஒப்பிட்டு வெளிப்படுத்துவதாகும்.ஔவையார் தனது நண்பர் ஆகிய அதியமான் நட்பால் எவ்வகை பண்புகளைக் கொண்டு வெளிபடுத்த வேண்டும் என்று இந்த ஆய்வில் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. சங்க கால நட்பு பல்வேறு அறிய படிப்பினைகளும் பண்புகளும் கொண்டு எவ்வகையான கூறுகள் அமைந்துள்ளது என்று இந்த ஆய்வில் மூலம் அறிய முடிகிறது. இன்றைய இளைஞர்கள் நட்பிற்கு முக்கியத்துவம் இருக்கிறதா அல்லது சங்க கால நட்பும் இன்றைய நவீன காலத்தில் இருக்கும் நட்பும் வேறுபாடு அமைந்துள்ளதா என்று இந்த ஆய்வு அணுகுமுறை மூலம் வெளிப்படுத்துகிறது.சங்க கால நட்பு பல கருத்துகளையும் படிப்பினைகளும் உணர்த்துகின்றது.

**கருச்சொற்கள்:** ஔவையார், அதியமான், நட்பு

**Abstract**

In this study, everyone is aware of the level of friendship and compare them to the present day. avvaiyaar reveals through the study how to pursue the characteristics of his friend Adhyamana Natpal. Through this study it is possible to find out what elements are located with different characteristics of Sangam term friendship. The study reveals the importance of friendship among today's youth or whether there is a difference between friendship in the Sangam period and friendship in today's modern times. Sangam period friendship feeds many ideas and lessons.

**Keywords:** avvaiyaar, Adhyaman Natpu, friendship

**முன்னுரை**

ஔவையார் அதியமான் நட்பு நிலையும் இன்றைய நட்பு நிலையோடு ஒப்பிட்டு ஆராந்து எனும் தலைப்பை யொட்டி ஆய்வு கூறுகள் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது. சங்க இலக்கிய புறநானூறு நூலில் உருவாகிய ஔவையாரும் அதியமானும் நட்பு நிலை பற்றிய படிப்பினைகள், இன்றைய காலத்திற்கு ஏற்ப எவ்வாறு அமைந்துள்ளது என்று இந்த ஆய்வு மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வில் விளக்கமுறை ஆய்வு, ஒப்பீட்டுமுறை ஆய்வு, மதிப்பீட்டுமுறை ஆய்வு போன்ற கூறுகள் அமைந்துள்ளது.

**தரவுப் பகுப்பாய்வு**

சங்க கால மன்னர்களில் ஒருவர் அதியமான் ஆவார். இவர் பல சங்க கால இலக்கியங்களில் இவரின் பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களில் அதியமான் நெடுமான் அஞ்சு பற்றிய தகவல்கள் அறிய முடிகிறது. அசோக வாசகம் எனும் நூலில் அதியமானும் ஔவையாரும் பற்றிய தகவல்களும் அவர்களின் நட்பு உறவுகளும் பற்றி விவரித்துள்ளனர்.

சங்க கால தமிழ் புலவர்களின் ஒருவர் ஆன ஔவையார் புறநானூறு பாடல்களின் மூலம் நட்பை பற்றி போற்றி பாடியுள்ளார்.அதியமானும் ஔவையாரும் நெருங்கிய நண்பர்கள்.குதிரை மலை எனும் பகுதியில் அதியமான் நெல்லி மரத்தை கண்டு மரத்தில் உள்ள நெல்லிக்காய் காண்கிறார். அந்த நெல்லிக்காய் நீண்ட ஆயுள் உயிர் வாழ கூடியது என்று அறிந்த அதியமான் அக்கனியை ஔவையாரிடம் ஒப்படைக்கிறார்.

இவற்றில் தமிழ் மொழி மேல் ஆழ்ந்த பற்று கொண்ட அதியமான் தான் விரும்புவதை விட ஔவையாரிடம் அந்த நெல்லிக்காய் உண்டால் நீண்ட ஆயுள் பெற்று தமிழ் மொழியின் வளர்ச்சி உலக முழுவதும் தெரிய வேண்டும் என்பதற்காக இச்சூழல் அமைந்துள்ளது. இதற்கு சான்றாக அதியமான் என்றதும்,

"நெல்லி அமிழ்து விளை தீங்கனி
ஔவைக்கு ஈந்த அதியன்"

என்று சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் கூறுவது நினைவுக்கு வரும் என்று தமிழுக்கும் தமிழருக்கும் ஔவை அதியமான் நட்பு எல்லோராலும் பேசப்படும். இதனால், இவர்களின் நட்பு உயர் தரம் கொண்டது.

இன்றைய காலகட்டத்தில் இவர்கள் போல் நட்பின் போற்றும் மனிதர்கள் குறைந்து காணப்படுகிறது. சங்க இலக்கியக் காலகட்டத்தில் நட்பின் மகித்துவம் பற்றி போற்றியுள்ளனர். அதியமானும் ஔவையாரும் நட்பு உறவு மூலம் பல படிப்பினைகள் கற்றுக் கொள்ள உதவுகிறது.

தொடர்ந்து, ஔவையார் தன் நட்பின் மீதுள்ள அன்பினைக் கொண்டு போற்றி பாடுவார். எடுத்துக்காட்டு, அதியமான் நெடுமான் அஞ்சி தம் படைகளோடு காட்டிற்குச் செல்கிறார். அப்பொழுது, முட்செடிகளுக்கிடையே ஒரு நெல்லி மரம் காண்கிறார். அம்மரத்தில் ஒரு நெல்லி காய் கிடைக்கிறது. நெல்லி காய் கிடைத்தவுடன் சிறுதளவு நேரம் யோசித்து அதின் சிறப்புகளை அறிந்து ஔவையிடம் கொடுக்கிறார். இவற்றை அறிந்த ஔவையார் தன் நட்பின் மீது மிகுந்த அன்பும் அறனும் கொண்ட அதியமான் போற்றி பாடுகிறார். இச்சூழல் மூலம் சான்றாக,

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்தகழல் தொடி தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி
பல்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கி
சாதல் நீங்க நமக்கு ஈத்தனையே !" - புறநானூறு 91

இப்பாடலின் மூலம் ஔவையார் தனது நட்பின் மீது கொண்டுள்ள அதிக அன்பும் மதிப்பும் வெளிப்படுத்துகிறார். சங்க இலக்கிய காலத்தில் இவர்கள் போல் நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது பெரும்பாலும் காணமுடிகிறது. ஆனால், இன்றைய நவீன காலகட்டத்தில் பெரும்பாலும் நட்பை போற்றுவது மிகவும் குறைந்து காணப்படுகிறது. ஔவையாரும் அதியமானும் நட்பை போல் இன்றைய இளஞர்களிடையே காணப்படுவது சாத்தியமற்றது. இவர்களைப் போல் உண்மையான நட்பு உறவைப் போற்றும் பண்புயுடைவராக விளங்க வேண்டும்.

மேலும், ஔவையார் தனது நண்பர் ஆகிய அதியமான் மீது பிறரிடம் தனது நட்பு உறவை விட்டு கொடுக்காமல் இருப்பது உண்மையான பண்பினைக் கொண்டதாகும் என்று ஒரு சூழல் மூலம் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வடகிழக்கில் அமைந்துள்ள காஞ்சி தலைநகரம் கொண்டு தொண்டைமான் இளந்திரையன் ஆட்சி செய்துள்ளார். அதியனுக்கும், தொண்டைமான் இளந்திரையனுக்கும் இடையில் அரசியல் பிரச்சனைகள் ஏற்பட்டதன் வழி காரணமாகப் போர் ஏற்படும் சூழல் உருவானது. தொண்டைமான், அதியமானுடன் போருக்குத் தயாரானான். அதியன் அமைதியை விரும்புவார். இவற்றை அறிந்த ஔவையார் போர் நிகழாது தடுத்து நிறுத்து வதற்காக, அதியனின் தூதராகத் தொண்டைமான் இளந்திரையனிடம், அதியனுக்காகத் தூதுச் சென்றார்.

தொண்டைமான் ஔவையாரை வரவேற்று பின்பு தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டிப் பெருமைப் பட்டுக் கூறி கொண்டிருந்தார். அவன் செருக்கினை அழிக்க நினைத்து அவனது கர்வத்தை ஒடுக்கவும் அதியனின் வீரத்தைத் தெரிவிக்கவும் என்று அதியமான் புகழை ஒன்றைப் பாடினார் ஔவையார்.

தொடர்ந்து, ஔவையாரும் அதியமானும் நட்பில் தீராத அன்பு பண்பினைக் கொண்டுள்ளது என்று இந்த ஆய்வில் முடிவில் தெரியவந்துள்ளது. தனது நண்பன் ஆகிய அதியமான் உயிருக்கும் மேலாகக் கருதப்பட்டு அன்பு செலுத்துவதை விட இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்று அறிந்து கொள்கிறார். நீண்ட நாள் வாழ்வதற்காக அதியமான் கொடுத்த நெல்லிக்கனி கொண்டு தனது பாடலின் மூலம் வெளிப்படுத்துகிறார். நீலமணிமடற்றுச் சிவபெருமான் போன்று நீண்ட ஆயுள் நிலைபெற்று வாழவேண்டும் என்று தனது அன்பினைப் பாடலின் மூலம் வழியுறுத்துகிறார். இதற்கு சான்றாக

"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும! நீயே, தொல்நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கி,
சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே” (புறம்.91)

என்ற வரிகள் கொண்டு தனது நட்பின் மீது கொண்ட தீராத அன்பினை வெளிப்படுத்துகிறார். தான் நெடுங்காலம் வாழ்வதைவிட தமிழை வாழவைக்க வேண்டும் என்று அதியமானின் சிந்தனை சீர்த்தூக்கி சிந்திக்க வைக்கின்றது. தமிழ் மொழியின் வளர்ச்சி மேலும் உயர வேண்டும் என ஔவையாருக்குக் கொடுத்த நெல்லிக்கனியின் மூலம் தன் நட்பின் அன்பை வெளிப்படுத்துகிறார். சங்க இலக்கிய காலத்தில் நடைபெற்ற நட்பைப் போற்றும் சூழல்களும் இன்றைய காலத்தில் சூழல்களும் வேறுபாடுகள் அமைந்துள்ளது. அந்தக் காலத்தில் நட்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பர். எந்த வேறுபாடுயின்றி ஒருவர்க்கொருவர் அன்பை வெளிப்படுத்துவர். நல்ல நட்பின் மூலம் பல நிலைகளை உயர செய்யும். இன்றைய காலகட்டத்தில், ஔவையாரும் அதியமானும் போன்ற நண்பர்கள் குறைந்து நிலையில் காணப்படுகிறது. ஒருவர்க்கொருவர் அன்பினை வெளிப்படுத்தி கொள்வது ஒரு தூய நட்பின் அறிகுறியாகும். அதனால், சங்க இலக்கிய காலத்தின் நட்பை போற்றும் பண்பு மேலும் தொடர வேண்டும் என்று ஆய்வில் மூலம் வெளிப்படுத்துகிறது.

ஆணுக்கும் பெண்களுக்கும் சார்ந்த நட்பின் மூலம் அன்பை வெளிப்படுத்தினால் அது காதல் என்று ஒரு சிலர் நம்புவர். ஆனால்,இதற்குமாறாக ஔவையாரும் அதியமானும் நட்பு ஒரு புரிந்துணர்வு தன்மை இருக்கிறது என்று இந்த ஆய்வில் முடிவில் வலியுறுத்துகிறது. சங்க இலக்கிய காலங்களில் நடைபெற்ற சூழல் மூலம் வலியுறுத்துகிறது. அதியமான் போர்களில் வென்று நல்லதொரு வீரன் ஆவார். பல போர்களில் வெற்றி பெற்ற இவர் தகடுரில் நடந்த போரில் தோல்வியடுகிறார். போர் முடிவில் அதியமான் மார்பில் வேல் பாய்ந்து மாண்டு கிடைந்தார். இந்த செய்தியை அறிந்த ஔவையார் மனம் உடைந்து

அதிந்து போனார். தனது நண்பன் மார்பில் எதிரியின் வேலை தாங்கி கிடைப்பதைக் கண்ட ஔவையார் ஒரு பாடலை புலம்பு அறிந்து பாடுகிறார். எடுத்துக்காட்டு,

"......இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புண்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
ஐஅருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாங்குலன் கொல்லோ
இனிப் பாடுநருமில்லை
பாடுநர்க்கு ஒன்றீகுநருமில்லை"

என்று புலம்பல் உணர்வோடு பாடுகிறார். தனது நண்பன் நெடுமான் அஞ்சி போர்களத்தில் துன்பம் படும்போது ஔவையாரும் சேர்ந்து கண்ணீர் வடிக்கிறார். இந்தக் காட்சி உண்மையான நட்புக்குத் துணை புரியும் என்று நம்பப்படுகிறது. இன்றைய நடைமுறையில் இளஞர்களிடையே உண்மையான நட்பு ஒரு சிலர் நபரிடம் காண இயலும். இருவரும் புரிதலுக்கு ஏற்று நடப்பது உண்மையான நட்பு என்று ஆய்வு அணுகமுறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்றைய நவீன நடைமுறை வாழ்க்கையில் இது போன்று நட்பு உறவை பின்பற்ற ஔவையாரும் அதியமானும் முன்மாதிரி நண்பர்கள் போன்று திகழ்கின்றனர். ஆகவே, நம் முன்னோர்கள் படைத்த தமிழிலயக்கங்களில் கற்று அறிந்து நம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டு என இந்த ஆய்வில் முடிவு வலியுறுத்துகிறது.

சென்ற காலங்களில் பெண்கள் அடிமை படுத்தி வாழ்ந்த வரலாறு அறிய முடிகிறது. ஆனால், இன்றைய காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக இருப்பது காண முடிகிறது. ஒரே பாலினம் கொண்ட நபர்களிடையே உண்மையான தூய்மையான நட்பைக் காண இயலும். ஆனால், ஒரு பெண்ணும் ஆணும் நட்பு உறவைத் தொடர மென்மேலும் கடினம் என்று அனைவராலும் அறிய கூடியவை. இவ்வாய்வில் அதியமான் எனும் அரசனும் ஔவையார் எனும் புலவரும் இடையே உயர்ந்த நட்பு எவ்வாறு சங்க இலக்கிய காலங்களில் கையாளப்பட்டது என்று வலியுறுத்துகிறது. ஒவ்வொரு மனித உறவில் முக்கியப் பங்கு வகிப்பது நட்பு ஆகும். நட்புக் கொள்ளும் பாங்கு நல்லவர்களுடன், அறிவுடையோருடன், கற்றறிந்த சான்றோர்களுடன், இருக்க வேண்டும் என்றும் இவ்வாய்வில் மூலம் வெளிப்படுத்துகிறது. ஔவையாரும் அதியமான் நட்பு ஒரு நல்ல முன்மாதிரியான சான்றோர் என்று திகழ்கின்றனர்.ஆதலால், உண்மையான நட்பு இவர்கள் போன்று இருக்க வேண்டும் என இந்த ஆய்வில் மூலம் வலியுறுத்துகிறது. நல்ல பண்புடையவர்களை நண்பர்களாக ஆக்கிக்கொள்வது அறிவார்ந்த செயல் ஆகும்.

## நிறைவுரை

சங்க கால நட்புப் பல படிப்பினைகள் வலியுறுத்துகிறது. தமிழ் இலக்கியங்களில் நன்னெறி பண்புகள் கொண்டு பல கருத்துகளை வெளிப்படுத்துகின்றனர். இதனால், நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நட்பின் பண்புகளை ஔவையாரும் அதியமானும் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

அறக்கலைச்செல்வி, தி. (2020) ஔவையார்- அதியமான் நட்பு - https://figshare.com/authors/9141485
கபிலன் குமார் (2021). ஔவையார் & அதியமான் நட்பு - https://kabilankumar36.wordpress.com
சாகித்திய அக்காதேமி. (1998) இந்திய இலக்கிய சிற்பிகள் (ஔவையார்) - https://www.tamildigitallibrary.in/admin/assets/book